# நல்லூர், யாழ்ப்பாணம்

## முதலாம் தவணைப்பரீட்சை - 2014

தரம் - 10 | பரதநாட்டியம் | நேரம் 3 மணித்தியாலம்

### பகுதி- I

மிகப்பொருத்தமான விடையின் கீழ் கீறிடுக.

01. நாட்டியக் கச்சேரிக்குப் பயன்படும் துளைக்கருவிகளில் ஒன்று

1. மிருதங்கம் 2. புல்லாங்குழல் 3. வயலின் 4. தாளம்

02. திஸ்ர சதுஸ்ர நடைகளின் கூட்டுத்தொகையை எண்ணிக்கையாக எடுத்துக் கொள்ளும் நடை

1. கண்டம் 2. திஸ்ரம் 3. மிஸ்ரம் 4. சங்கீர்ணம்

03. தித்தெய்த்த தாதெய் அடவு ஓர்

1. பாய்ச்சல் அடவு 2. சாரிகா அடவு 3. ஊஞ்சல் அடவு 4. மகுட அடவு

04. கிடதகதரிகிடதொம் அடவு அமைந்துள்ள தாளம்

1. ஆதி 2. திஸ்ரஏகம் 3. துருவம் 4. ரூபகம்

05. பரதநாட்டிய உருப்படி வரிசையில் முதலாவதாக இடம்பெறுவது

1. சப்தம் 2. அலாரிப்பு 3. ஜதீஸ்வரம் 4. பதம்

06. கண்டஜாதி திரிபுடை தாளத்தின் அட்சர எண்ணிக்கை

1. 6 2. 7 3. 9 4. 12

07. பிடில் வாசிப்பதில் வல்லவராகத் திகழ்பவர்

1. பொன்னையா 2. கோபாலகிருஸ்ண பாரதியார் 3. சிவானந்தம் 4. வடிவேலு

08. கிடதகதரிகிடதொம் அடவின் காற்செய்கையை ஒத்தவேறோர் அடவு

1. தாதெய் தெய்த 2. ததிங்கிணதொம் 3. தெய்யா தெய்யி 4. தெய்கத்தெய்கி

09. பாஷே என்பதன் கருத்து

1. சங்கிலி 2. பெட்டி 3. கயிறு 4. வண்டி

10. பல்லக்கு என்பதன் வடமொழிச் சொல்

1. கட்வா 2. ஷிபிகயோ 3. ஷ்ருங்கலா 4. சம்புடே



kalvi.lk

11. பக்திசார் கிராமிய நடனங்களில் ஒன்று

1. கும்மி 2. கோலாட்டம் 3. ஒயிலாட்டம் 4. கரகம்

12. நரசிம்மனுக்குரிய ஹஸ்தங்களை எடுத்துக்கொள்ளும் தேவர்

1. பிரம்மா 2. விநாயகர் 3. சிவன் 4. முருகன்

13. மகாபலி சக்கரவர்த்தியின் ஆணவத்தை அழிக்க விஷ்ணுவால் எடுக்கப்பட்ட அவதாரம்

1. வாமண அவதாரம் 2. கல்கி அவதாரம்
3. பரசுராம அவதாரம் 4. ராம அவதாரம்

14. அலாரிப்பில் இடம்பெறும் மண்டியடவு

1. 4வது 2. 3வது 3. 2வது 4. 1வது

15. ஸா; ரி ; க; மா - ஸ்வரம் எடுக்கும் மாத்திரை

1. 10 2. 12 3. 11 4. 13

Education கல்வி அධ්‍යාපන

16. கிண்கிணி செய்ய பயன்படாத உலோகம்

1. இரும்பு 2. செம்பு 3. வெள்ளி 4. வெண்கலம்

17. சிவந்தநிறம், அழகு போன்ற இலட்சணங்களைக் கொண்டிருப்பது

1. சபை 2. பாத்திரம் 3. அபாத்திரம் 4. குரு

18. விக்னானாம் நாசனம் என ஆரம்பிக்கும் ஸ்லோகம் குறிப்பது

1. அரங்கதேவதா ஸ்துதி 2. புஸ்பாஞ்சலி 3. நாட்டியக் கிரமம் 4. கிண்கிணி .இலட்சணம்

19. சபையானது மலர்களாகக் கொண்டு விளங்குவது

1. வேதங்களை 2. அறிஞர்களை 3. வண்டுகளை 4. சாஸ்திரங்களை

20. பஹத்தரட்ட நட்டும் என்பப்படுவது

1. றுகுணு நடனம் 2. பரதநாட்டியம் 3. சப்ரகமுவ நடனம் 4. கண்டிய நடனம்



kalvi.lk

21. உடரட்ட நடனத்தின் பிரதான தாள வாத்தியம்...

1. தவுல 2. தெவோல் பெரய 3. கெற்றபெரய 4. தபேலா

22. "கலிகால சாஹித்திய சர்வந்த பண்டித" எனப் போற்றப்பட்ட அரசன்

1. நந்திவர்மன் 2. மகேந்திரவர்மன் 3. தஞ்சை நால்வர் 4. 2ம் பராக்கிரமபாகு

23. பல்லவி, அனுபல்லவி, சரணம் எனும் பகுதிகளையுடைய உருப்படி

1. சப்தம் 2. ஜதீஸ்வரம் 3. அலாரிப்பு 4. புஸ்பாஞ்சலி

24. பரதநாட்டிய உருப்படி வரிசையில் முதலாவதாக இடம்பெறுவது

1. சப்தம் 2. அலாரிப்பு 3. ஜதீஸ்வரம் 4. வர்ணம்

25. பக்தி இலக்கிய காலப்பகுதியாகக் குறிப்பிடப்படுவது

1. சோழர்காலம் 2. சங்ககாலம் 3. பல்லவர் காலம் 4. ஆங்கிலேயர் காலம்

26. பல்லவர் ஆட்சிக்காலம்

1. 3-6ம் நூற்றாண்டு 2. 6-9ம் நூற்றாண்டு 3. 9-12ம் நூற்றாண்டு 4. 1-3ம் நூற்றாண்டு

27. நெற்றிக்கு நேரே பிடிக்கும் அஞ்சலி

1. தெய்வத்திற்கு 2. பிராமணரிற்கு 3. சபைக்கு 4. குருவிற்கு

28. பிரமரீ என்பது

1. நிற்றல் 2. சுற்றிவருதல் 3. நடத்தல் 4. பாய்தல்

29. அழித்தல் தொழிலைப் புரிபவர்

1. பிரம்மா 2. விஷ்ணு 3. சிவன் 4. சண்முகன்

30. நாட்டுக்கூத்தை இயக்குபவர்

1. நட்டுவனார் 2. அரசர் 3. சபாநாயகன் 4. அண்ணாவியார்

31. அடதாளத்தின் அங்க அடையாளம்

1. 1100 2. 101 3. 1011 4. 01



Education கல்வி அධ්‍යාපන
kalvi.lk

32. தாளத்திற்கு முன் பாட்டு ஆரம்பிப்பது

1. சமம் 2. விஷமம் 3. ஆதீதம் 4. அனாகதம்

33. நாட்டியக் கிரமத்தின் படி கை செலுத்துமிடத்தைத் தொடர்வது

1. மனம் 2. இரசம் 3. கண் 4. பாவம்

34. பெண்களால் மட்டும் ஆடப்படுவது கூத்து

1. துணங்கைக் கூத்து 2. வள்ளிக்கூத்து 3. குரவைக்கூத்து 4. வேலன் வெளியாட்டு

35. மகுட அடவுடன் முடிவுற வேண்டியது

1. அடவு 2. சொற்கட்டு 3. தீர்மானம் 4. கோர்வை

36. தஞ்சை நால்வரின் குருவாக விளங்கியவர்

1. பாபநாசம் சிவன் 2. கோபாலகிருஸ்ண பாரதியார்
3. துளஜா மகாராஜா 4. முத்துஸ்வாமி தீட்சிதர்

37. வார்த்தை மூலம் புலப்படுத்தப்படும் அபிநயம்

1. ஆங்கிகம் 2. வாச்சிகம் 3. ஆஹார்யம் 4. சாத்விகம்

38. தலையை வட்டமாகச் சுற்றுதல்

1. ஆலோலிதம் 2. அவலோகிதம் 3. அதோமுகம் 4. துதம்

39. சுத்த நிருத்த உருப்படிகளில் ஒன்று

1. பதம் 2. வர்ணம் 3. ஜதீஸ்வரம் 4. கீர்த்தனம்

40. ருஹுணு நடனத்தின் மாலக்கம எனும் உருப்படி

1. வட்டமாக சுழன்றாடுவது 2. பம்பரம் போல் சுற்றி ஆடுவது
3. குதிரை போல் பாய்ந்தாடுவது 4. அரைமண்டியில் நின்றாடுவது

(40x1 = 40 புள்ளிகள்)



kalvi.lk

## பகுதி – II

**1ம் வினாவிற்கும் ஏனைய 4 வினாக்களுக்குமாக மொத்தம் 5 வினாக்களுக்கு விடை தருக**

01. 1. ருகுணு நடனத்திற்குப் பயன்படும் தோற்கருவி அழைக்கப்படும் பெயர்கள் 2 தருக.
    2. இரு கைகளிலும் ஒரே அஸம்யுத ஹஸ்தம் பிடித்து அபிநயிக்கும் அவதாரங்கள் 2 தருக.
    3. குடைவரைக் கோயில்கள் யாருடைய ஆட்சிக்காலத்தில் நிர்மாணிக்கப்பட்டது?
    4. தக்கிடதக தரிகிடதொம் என்பதன் நாட்டியச் சொற்கட்டு யாது?
    5. உத்பிளவன பேதத்திற்குரிய ஓர் அடவைக் குறிப்பிடுக?
    6. கிண்கிணியின் அதிதெய்வம் யாது?
    7. பஹத்தறட்ட நடனத்தின் முக்கிய பாதநிலை யாது?
    8. சங்கமருவிய காலத்தின் சிறந்த நடனமங்கைக்கு வழங்கப்பட்ட பட்டம் யாது?
    9 மிருதங்கத்தில் வாசிக்கப்படும் சொற்கட்டு அமைப்புகள் எவ்வாறு அழைக்கப்படும்?
    10.பரதநாட்டியத்தை கச்சேரி ரூபமாக அமைத்தவர் யார்?

(12 புள்ளிகள்)

Education கல்வி අධ්‍යාපන

02. 1. கிடதகதரிகிடதொம் அடவு அமைந்துள்ள தாளம் யாது?
    2. இவ் அடவின் நாட்டியச்சொற்கட்டு யாது?
    3. இவ் அடவின் சொற்கட்டினைத் திரிகாலத்திலும் அங்க அடையாளத்துடன் எழுதுக.

(12 புள்ளிகள்)

03. பின்வரும் ஹஸ்தங்களுக்குரிய விநியோகங்களையும் கருத்தையும் எழுதுக.

1. சம்புடம் 2. பாசம் 3. வராகம் 4. கட்வா

(4x3 =12 புள்ளிகள்)

04. தசாவதாரங்களை வலது இடது ஹஸ்தங்களுடனும் பாதநிலைகளுடனும் எழுதுக.

(12 புள்ளிகள்)

05. பின்வருவனவற்றின் இலட்சணங்களைத் தருக.

1. குரு 2. வபாநாயகன் 3. அபாத்திரம் 4. அரங்கதேவதாஸ்துதி

(4x3 =12 புள்ளிகள்)

06. சிங்கள மக்களுடைய நடனங்களில் ஒன்றான பஹத்தறட்ட நடனம் பற்றி விளக்குக.

(12 புள்ளிகள்)

07. பல்லவர் கால நடனம் பற்றி விளக்குக. (12 புள்ளிகள்)



kalvi.lk

Education கல்வி අධ්‍යාපන

kalvi.lk

# 2025

## 1ம் தவணை வகுப்புகள்

**தரம் 6 முதல் 11 வரையான மாணவர்களிற்கான தமிழ் மற்றும் ஆங்கில மொழிமூல வகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ளன.**

**ஆரம்பம் 01.01.2025**

இலங்கையின் எப்பாகத்திலிருந்தும் Zoom app மூலம் எமது வகுப்புகளில் இணைந்து கொள்ள முடியும்.

அனைத்துப் பாடங்களும் ஒரே கல்வி நிறுவனத்தின் கீழ்...

Education கல்வி அධ්‍යාපන Kalvi.lk

Whatsapp 075 287 1457